# மாகாணசபைத் தேர்தல் முறைமையும் வடக்கு மாகாணசபை தேர்தலும் - 2013 ஒரு நோக்கு

P.K.Piremkumar and K.T.Ganeshalingam,
Department of Political Science, Faculty of Arts, University of Jaffna.
pirem66@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையின் அரசியலில் தனித்துவமான கட்டமைப்பு முறையாக மாகாணசபை முறைமை காணப்படுகிறது. இது இலங்கையில் தீவிரமடைந்திருந்த இன மோதலை தனிப்பதற்கான ஒரு தீர்வைப்பெற்றுக்கொடுக்கும் நோக்கில் 1987ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் புதிதாக சேர்க்கப்பட்ட 154வது சரத்தின்படி மாகாண சபைகள் உருவாக்கப்பட்டது. அந்தவகையில் வடகிழக்கை தனியான மாகாணமாக அங்கீகரித்து தமிழர் மாகாணமாக உருவாக்கப்பட்டது. இது 2007 ஆம் ஆண்டு வரையும் ஒரே மாகாணமாக விளங்கியதுடன் சிங்கள தீவிரவாத சக்திகளால் தொடுக்கப்பட்ட வழக்கின் பிரகாரம் வட மாகாணம் தனித்து கிழக்கிலிருந்து பிரிக்கப்பட்டது. அதன்பிரகாரம் 2013 இல் வடமாகாண சபைக்கான தேர்தல் நடாத்தப்பட்டு ஓர் மாகாணசபை அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

## 1. ஆய்வு அறிமுகம்

மாகாணசபை முறைமையானது 1987ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது.ஆனால் 2013 வரை வடமாகாண சபைக்கு சுதந்திரமான தேர்தல் ஒன்று நிகழாத அரசியல் சூழல் காணப்பட்டது. 2010இல் கிழக்கு மாகாணசபை தேர்தலைச் சந்தித்தபோதும் இதனை நெருக்கடிமிக்க தேர்தல் நடத்தையாகவே கருதப்பட்டது. இந்தவகையில் வடமாகாணசபைத்தேர்தல் 21-09-2011 அன்று இடம் பெற்றது. இத்தேர்தலில் பல்வேறு கட்சிகளும் சுயேட் சைக் குழுக்களும் போட்டியிட்டமை தமிழ்மக்களின் அரசியல் கலாசாரத்தை வெளிப்படுத்தியது. இதனடிப்படையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதிகளவான ஆசனங்களை (30) கைப்பற்றி வடமாகாண சபையை ஆட்சி செய்து வருகிறது.

## 2. இலக்கிய மீளாய்வு

அம்பலவானர் சிவராஜா[1] "இலங்கை அரசியல்" எனும் நூலில், 1987ம் ஆண்டில் மாகாணசபை உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தஇலங்கை இந்திய ஒப்பந்தம் மற்றும் 1987 இற்கு முன்னர் காணப்பட்ட உள்ளூராட்சியமைப்பு தொடர்பாக விரிவான விளக்கங்கள் காணப்படுவதால் இவ்ஆய்வுக்கு பொருத்தமானது என இந்நூல் கொள்ளப்படுகிறது.

அசோக குணவர்த்தன [2] இலங்கையின் மாகாண சபைகள் அதன் செயற்பாடுகளும் சேவைகளும் எனும் நூல் மாகாணங்களின் அரசாங்க முறைமை எனும் தலைப்பின் கீழ் சட்டத்துறை நீதித்துறை நிர்வாகத் துறை ஆகிய மூன்று துறைகளினதும் கடமைகள் செயற்பாடுகளை விரிவாக ஆராய்கிறது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பு – 1978இல் 13 வது சீர்திருத்தத்தில் மாகாணசபைகளுக்கான பகிர்ந்தளிப்புக்கள் 154 (ஆ) இல்.[3].

- உள்ளூர் சட்டமும் ஒழுங்கும்
- காணியும் காணியமர்வும்
- விவசாயமும் கைத்தொழிலும்
- கல்வியும் கலாசாரமும்

ஆகிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. வடமாகாணசபையின் செங்கோல் மகாத்மியம் (2013) வட மாகாணசபைத் தேர்தலின்பின்னர் வெளியிடப்பட்ட இம் மகாத்மியத்தில் வட மாகாணம் தொடர்பான புவியியல் ஆள்புலம், குடியியல், சமூகம், கலாசாரம், விழுமியம் போன்ற சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. வடமாகாணம் தொடர்பான ஆய்வு என்பதால் இவ்வெளியீடானது பயனுள்ளதாக அமைந்தமையால் பயன்படுத்தப்பட்டுள்ளது.